இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

## YESUVAI THINAM PARKIREN

VOL : 26 ISSUE : 10 OCTOBER 2026 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



# உங்களை மயக்கினவன் யார்?

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN




தொடர்புக்கு : 94980 00449, 94428 00449, 94428 00447



# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஆகஸ்ட் 20-ம் தேதி முதல் 25 வரை ஆஸ்திரேலியாவில் பெர்த் மாகாணத்தில் எழுப்புதல் கூட்டங்களை நடத்த தேவன் கிருபை செய்தார். அருமையான அண்ணன் சாம் ஜெபத்துரை அவர்களுடைய மூத்தமகள் சபீனா ஜெபத்துரை அவர்கள், நாங்கள் கர்த்தருடைய வார்த்தையை ஜனங்களுக்கு அறிவிக்க மிகவும் நேர்த்தியாக கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தார்கள். மகள் சபீனாவும் தம்பி ரோசனும் காட்டிய அன்பு, உதவி கொஞ்சம் அல்ல, அதிகமாக எங்களை ஒரு தாய் தகப்பனை போல நேசித்து அன்பு செய்தார்கள். கர்த்தர் தாமே அவர்களையும், சபையும் ஆசீர்வதிப்பாராக. அதைத் தொடர்ந்து சிங்கப்பூர் தேசத்தில் கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்க தேவன் கிருபை பாராட்டினார். சகோதரர் ஜான்சன் சிறப்பாக கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தார்கள். அதைத் தொடர்ந்து திருப்பத்தூர் பரிசுத்த உபவாசம் முகாமில் கலந்து கொள்ளவும், இந்தியாவின் எழுப்புதலுக்காக ஜெபிக்கவும் தேவன் கிருபை பாராட்டினார். தேவன் எல்லா தேவஊழியர்களையும் மகிமையாக பயன்படுத்தினார். ஜனங்கள் பெலனடைந்து சென்றார்கள். ஒவ்வொரு மாதமும் நடைபெறும் வானத்தின் வாசல் ஜெபத்தையும், மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்தையும் கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதித்து வழி நடத்தி வருகிறார். இந்த மாத இதழ் உங்கள் கைகளில் இருக்கும் பொழுது நாங்கள் சுவிசேஷ தீர்க்கதரிசன முகாமில் ஈடுபட்டிருப்போம். இந்த முகாமிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள், முடிந்தவர்கள் அதிலே நேரடியாக வந்து கலந்து கொள்ளுங்கள். உலகம் ஒரு முடிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட உலகத்தில், எல்லாம் கை மீறிப் போன உலகத்தில் கர்த்தருடைய ராஜ்யம் பரவவும், ஜனங்கள் தங்கள் வழிகளை சரி செய்து தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியாகவும், அதற்கு இந்த ஊழியம் பயன்படவும், கர்த்தர் எங்களைப் பயன்படுத்த ஜெபித்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து உங்கள் ஜெபத்தாலும், உதாரத்துவமான காணிக்கையினாலும் இந்த ஊழியத்தை தாங்குங்கள். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



**இயேசுவின் பணியில்**

L. Vincentraj

(சகோ .L.வின்சென்ட்ராஜ்)

# உங்களை மயக்கினவன் யார்?

(சகோ.L.வின்சென்ட்ராஜ்)



ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

**புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப் பட்டிருந்தாரே. கலா 3:1.**

தேவனுடைய வார்த்தையை கேட்டு அதன்படி நடந்த கலாத்தியா சபையிலுள்ள தேவப்பிள்ளைகளைப் பார்த்து பவுல் அப்போஸ்தலன் நீங்கள் சத்தியத்திற்கு கீழ்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார் என்று கேட்கிறார், இந்த கலாத்தியா சபையார் இயேசுவுக்காக நன்றாக ஓடினவர்கள், செயல்பட்டவர்கள் இவர்களைப் பார்த்து பவுல் புத்தியில்லாத கலாத்தியரே என்கிறார். நாம் வாழ்கின்ற இந்த கிறிஸ்தவ உலகம் ஒரு மயக்கத்தில் இருக்கிறது.

**சரீர பிரகாரமான மயக்கம் என்பது** ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் எந்த நேரம், எப்பொழுது வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் எதிர்மறையான காரியங்கள், போராட்டமான சூழ்நிலைகள் உருவாகும் போது நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கையில் உள்ளது என்பதை நாம் அறிய வேண்டும். எந்த சூழ்நிலையிலும் கர்த்தரை மாத்திரம் தான் நாம் நோக்கிப் பார்க்க வேண்டும். நம் ஜீவன் தேவனுடைய கையில் இருக்கிறது என்பதை நாம் ஒவ்வொரு நாளும் உணர வேண்டும். இந்தப் போராட்டமான உலகத்தில் பல காரியங்களில் சிக்கி மடிந்து, நமக்கு அருமையானவர்களை இழந்து தவிக்கின்ற சூழ்நிலையில், உலக ஆடம்பரங்களைப் பார்த்து, வசதி வாய்ப்புகளை பார்த்து, மற்ற மனிதர்களைப் பார்த்து ஜெபிக்காமல், வேதத்தை வாசிக்காமல் சோர்ந்து போய் நிற்கிறீர்களா?. இன்றைக்கு ஒரு விதமான மயக்கம் மக்களிடையே அதிகரித்து வருகிறது. ஊழியம் செய்வதில் மயக்கம், ஜெபம் பண்ணுவதில் மயக்கம், மற்றவர்கள் நம்மிடத்தில் என்ன சொல்ல வருகிறார்கள் என்பதை கேட்பதில் கூட ஒரு மயக்கம் எனக்கு எல்லாம் தெரியும் போ என்ற நிலை. ஒருமுறை நான் காரில் செல்லும் போது விபத்துக்குள்ளாகி என் தலையில் அடிபட்டு இரத்தம் வடிந்த நிலையில் மயக்கமாகி விட்டேன். கர்த்தர் ஒரு தூதனை அனுப்பி அந்நேரத்தில் என்னை காப்பாற்றினார். இது ஒரு மனிதனுக்கு அவனுடைய சரீர பிரகாரமாக ஏற்படுகின்ற மயக்கம். ஒருவருக்கு ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்றால் அந்த மனிதனுக்கு மயக்க ஊசி செலுத்துகிறார்கள். இந்த மயக்கத்தை போல தான் அன்று தேவன் ஆதியாகமத்தில் ஆதாமுக்கு ஆழ்ந்த மயக்கத்தை, நித்திரையை உண்டு

பண்ணி அவன் மயக்கத்தில் இருக்கும்போதே அவனுடைய விலா எலும்பிலிருந்து ஒரு எலும்பை எடுத்துவிட்டு அந்த இடத்தை சதையினால் அடைத்தார். இதனால் தான் ஆண்களுக்கு பெண்களை விட விலா எலும்பு ஒன்று குறையாக இருக்கும். அந்த விலா எலும்பைக் கொண்டு ஒரு மனுஷியை உருவாக்கினார். இந்த சரீர பிரகாரமான மயக்கத்தை குறித்து நான் உங்களிடத்தில் சொல்ல வரவில்லை. இக்காலத்தில் அநேகருக்குள் ஒருவிதமான ஆவிக்குரிய மயக்கம் காணப்படுகிறது. இயேசுவைப் பற்றி ஒரு உணர்வோ, ஜெபத்தை குறித்த ஒரு தாகமும் இல்லாத நிலை காணப்படுகிறது. நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு மயக்கத்தில், ஒரு கோமாவில் நம் ஆத்துமா கிடக்கிறது இது நல்லதல்ல. சங்கீதக்காரன் எழுதுகிறான் சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்ந்து, என் பிராணனைத் தரையோடே நசுக்கி, வெகுகாலத்துக்குமுன் மரித்தவர்கள்போல் என்னை இருளில் இருக்கப்பண்ணுகிறான். சங் 143:3. எத்தனையோ மாதங்கள், எத்தனையோ காலங்கள் இயேசுவுக்கும் உங்களுக்கும் தொடர்பு இல்லை என்ற நிலை காணப்படுகிறது. அவருடன் நீங்கள் பேச முடியவில்லை, ஆவியில் வெளிப்பாடு இல்லை, கர்த்தர் உன்னோடு பேசி பல மாதங்கள், வருஷங்கள், காலங்கள் ஆகிவிட்டது. ஆனால் அந்த பழைய அனுபவத்திலேயே இன்றைக்கும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், வெளிப்புறத் தோற்றத்தில் நல்லவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதனால்தான் சங்கீதக்காரன் சொல்லுகிறான் நான் வெகு காலத்துக்கு முன்னே மரித்தவன் போல் இருக்கிறேன், என்னால் ஜெபிக்க முடியவில்லை, என்னால் துதிக்க முடியவில்லை, கட்டப்பட்டிருக்கிறேன் என்று சொல்லுகிறார்.எவ்வளவு கண்ணீரோடு தன்னுடைய சஞ்சலத்தை இந்த சங்கீதக்காரன் தேவசமுகத்தில் ஊற்றுகிறான். ஆண்டவரே என்னால் ஜெபிக்க முடியவில்லை, துதிக்க முடியவில்லை நான் இப்படி இருக்கிறேனே, வெகு காலத்துக்கு முன்பு மரித்தவன் போல நான் சும்மா இந்த உலகத்தில் நடமாடிக் கொண்டிருக்கிறேன். ஆதாமின் நிலையும் இதேதான் இந்த கனியை புசிக்கின்ற நாளிலே நீ சாகவே சாவாய் என்று தேவன் சொல்லி இருந்தும் அவர்கள் புசித்தார்கள். இது என்ன மயக்கம் தெரியுமா? ஆவிக்குரிய மயக்கம். அப்படியே கண்கள் திறந்து இருக்கும், ஆனால் புத்தியில் ஒரு மயக்கம் இருக்கும். அதனால்தான் பவுல் எழுதுகிறார் புத்தியில்லாத கலாத்தியரே, சத்தியத்திற்கு கீழ்ப்படியாத படிக்கு, அதன்படி வாழ முடியாதபடிக்கு உங்களை மயக்கினவன் யார் என்கிறார். நாகரீக உலகம், வசதி வாய்ப்புகள் நிறைந்த உலகம், இன்று ஜெபத்தை அருவருப்பாக பார்க்கிறது. அல்லேலூயா என்று சொல்லி, கைதட்டி பாடல் பாடுவது என்றால் அது கஷ்டமான காரியமாக இருக்கிறது, ஆலயத்தில் ஏசி இருக்க வேண்டும், விதவிதமான லைட்ஸ்கள் இருக்க வேண்டும், கஷ்டப்படாமல் பரலோகம் செல்ல வேண்டும் என்று நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட மயக்கத்தில் இருந்து புத்தி தெளிய வேண்டும். இளையகுமாரன் வாழ்க்கையில் அவன் சுயமாக எதையும் செய்யவில்லை. அவன் நண்பர்கள் அவனுக்கு தவறான ஆலோசனைகளை சொல்லி, அவனை உசுப்பேத்தி அந்த வழியில் செல்ல வைத்தார்கள். அந்த தொழில் செய்யலாம், இந்த தொழில் செய்யலாம், இப்படி பணத்தை சம்பாதிக்கலாம், அதை பெருகச் செய்யலாம் என்று சொல்லி அவனை தகப்பனுக்கு விரோதமாக செயல்பட வைத்து, சொத்தை பிரித்து வாங்கி வரச் செய்து, எல்லாம் செலவான பின்பு கடைசியில் அவனை நடுத்தெருவில் விட்டுச் சென்றார்கள். இதே போலத்தான் சாத்தான் ராஜ்யத்தையெல்லாம் உனக்கு தருகிற மாதிரி சொல்லி உங்களை ஏமாற்றி விடுவான். அவன் பொய்யன் தவறான ஆலோசனைகளைச் சொல்லி

உங்களை மயக்கி விடுவான். சாத்தானை நம்பி ஏமாந்து, மோசம் போகிறவர்கள் தான் அநேகராக இருக்கிறார்கள்.

## புத்தியில் மயக்கம்

கர்த்தர் உன்னைப் புத்திமயக்கத்தினாலும், குருட்டாட்டத்தினாலும், மனத்திகைப்பினாலும் வாதிப்பார். உபாகமம் 28:28

முதலில் ஒரு மனிதனுக்கு மயக்கம் எங்கு வருகிறது என்று தெரியுமா?. மூளையில், புத்தியில் வருகிறது. இன்றைக்கு உலகம் ஒரு மயக்கத்திற்குள் செல்லுகிறது அநேகருடைய புத்தியில் ஒரு மயக்கம் உண்டாகிறது. ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் ஆதாமும் ஏவாளும் புத்தியில் ஒரு மயக்கம் அடைந்து விட்டார்கள். தேவனுடைய சத்தம் எது, பிசாசின் சத்தம் எது என்று அவர்களுக்கு பகுத்தறிய தெரியவில்லை. பொல்லாத உலகத்தில் புத்தியில் அந்தகாரப்பட்டுப் போய்விட்டார்கள், எது வெளிச்சம் என்று தெரியவில்லை, எது நல்லது என்று தெரியவில்லை, இந்த கனியை புசிக்கும் நாளிலே நீ சாகவே சாவாய் என்று தேவன் சொல்லியிருந்தும் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. சாத்தான் ஆதாம் ஏவாளை முதலில் இதை சாப்பிடு என்று சொல்லி வஞ்சித்தான், அவர்கள் வாங்கி சாப்பிட்டு விட்டு தேவ மகிமையின் வஸ்திரத்தை இழந்து போனார்கள். புத்தியுள்ளவன் கற்பாறையின் மேல் வீட்டை கட்டுகிறான், புத்தி இல்லாதவனோ மணலின் மேல் வீட்டை கட்டுகிறான். அதனால் தான் வேதம் சொல்லுகிறது சகரியா 12:4-ல் அந்நாளிலே நான் குதிரைகளுக்கெல்லாம் திகைப்பையும், அவைகளின்மேல் ஏறியிருக்கிறவர்களுக்கெல்லாம் புத்திமயக்கத்தையும் வரப்பண்ணி, யூதாவம்சத்தின்மேல் என் கண்களைத் திறந்துவைத்து, ஜனங்களுடைய எல்லாக் குதிரைகளுக்கும் குருட்டாட்டத்தை உண்டுபண்ணுவேன் என்றுகர்த்தர் சொல்லுகிறார். குதிரையில் ஏறி இருக்கிறவர்களுக்கு புத்தி மயக்கம் உண்டாகும். உலகத்தின் ராஜாக்களுக்கும், அதிகாரிகளுக்கும், விஞ்ஞானத்தை நம்புகிறவர்களுக்கும் இனி இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கும். கர்த்தரை புறக்கணித்து விட்டு எனக்கு வேலை முக்கியம், எனக்கு சமுதாய முக்கியம், எனக்கு ஜாதி முக்கியம், எனக்கு விசேஷங்கள் முக்கியம் என்று ஓடுகிற ஒவ்வொருவருக்கும் புத்தியில் மயக்கம் உண்டாகும். குதிரையை நம்புகிறவனுக்கும், அதின்மேல் ஏறி இருக்கிறவனுக்கும் புத்தியில் ஒரு மயக்கத்தை உண்டாக்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

## கண்களில் மயக்கம்

அவர் திரும்ப வந்தபோது, அவர்கள் மறுபடியும் நித்திரைபண்ணுகிறதைக் கண்டார்; அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரைமயக்கம் அடைந்திருந்தபடியால், தாங்கள் மறுமொழியாக அவருக்குச் சொல்வது இன்னதென்று அறியாதிருந்தார்கள். மாற்கு 14:40

கெட்டதை நல்லதாக காட்டுகிறது தான் நித்திரை மயக்கம். அது கெட்டுப்போன உணவு, அது கெட்டுப்போன ராஜ்யம், ஆப்பிள் இதை தொடக்கூடாது என்பதை சாத்தான் இல்லை இதை நீ சாப்பிடு உன் கண்கள் திறக்கப்படும் என்று சொன்னபோது ஆதாம் தேவ கட்டளையை மீறினான், ஆதாமுக்குள், அவன் கண்ணில் ஒரு மயக்கம் வந்துவிட்டது. இன்றைக்கு நிறைய விபத்துக்கள் நடப்பதற்கு காரணம் என்னவென்றால் ஓட்டுநர்கள் தூங்கி விட்டதால் மாத்திரமல்ல அவர்கள் கண்கள் நித்திரை மயக்கத்தினால் நிறைந்திருப்பதும் தான். சிம்சோன் வாழ்க்கையை பாருங்கள் அவன் மகா பலசாலி, பெலிஸ்தியர் தேசத்தின் கதவுகளை தூக்கிக் கொண்டு நடந்தவன்.

இப்படிப்பட்ட பலசாலியாகிய அவன் தெலீலாள் என்ற பெண்ணின் மீது கண் மயக்கம் கொண்டு அவளை பார்த்தவுடன் அவன் வாழ்க்கை பரலோகம் போல அவனுக்கு தெரிகிறது. வேதம் வாசிக்கவில்லை, ஜெபிக்கவில்லை என்றால் நம்முடைய உள்ளம் இருளடையும், உணர்வில்லாமல் போய்விடும். என் பிள்ளைகளுக்காக நான் வாழ வேண்டும், அவர்களை கரை சேர்க்க வேண்டும், அவர்களுக்கு செய்ய வேண்டிய காரியங்களை நான் சரியாக செய்ய வேண்டும் என்பதில் உங்களுக்கு உணர்வு இருக்கிறது, ஆனால் ஜெபம் செய்ய வேண்டும், வேதம் வாசிக்க வேண்டும், ஆண்டவர் இயேசுவுக்காக ஊழியம் செய்ய வேண்டும் என்பதில் மாத்திரம் உணர்வில்லாதவர்களாக இருக்கிறீர்கள். இதற்கு மாத்திரம் என் வீட்டில் உள்ளவர்களை நான் கேட்க வேண்டும், அவர்கள் அனுமதிக்க வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். சிம்சோன் தெலீலாள் என்ற பெண்ணை பார்த்தவுடன் கண் மயக்கம் உண்டாகி, அவள் அழகில் மயங்கினான். அவனுடைய இந்த மயக்க நிலையால் அவன் கண்கள் பறிபோனது, முடிவில் அவன் கண்களை இழந்தவனாக நின்றான்.அப்போஸ்தலர் ஒன்பதாம் அதிகாரத்தில் ஆண்டவர் சவுலை பார்த்து சவுலே சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று கேட்டார். அதற்கு சவுல் தன்னை நீதிமானாக காண்பித்து, ஆண்டவரே நீர் யார் என்று கேட்கிறான். நான் யார் தெரியுமா? என்று தன் இருதயத்தில் பெருமிதம் கொள்ளும் போது, வானத்திலிருந்து ஒரு ஒளி அவன் மேல் வந்தது. அவன் கண்கள் பார்வையற்று, இருளடைந்தது. அவன் கண்களில் பார்வை பறிபோனது. ஆண்டவர் உங்களை சந்தித்தால் உங்கள் மனக்கண்களை திறந்து விடுவார், இல்லாவிட்டால் அது குருட்டாட்டமான கண்களாகத்தான் இருக்கும். இயேசுவோடு மூன்றரை வருடங்கள் கூடவே இருந்த சீஷர்கள் கூட இயேசு மரித்து உயிர்த்தெழுந்த பின்பு அவரைக் காணக்கூடாதபடிக்கு அவர்கள் கண்கள் மயக்க நிலையில் இருந்தது. அவர் யார் என்று கண்டு கொள்ள முடியாதபடிக்கு கண்கள் மூடப்பட்டிருந்தது. அப்பத்தை எடுத்து இயேசு அதை பிட்கிறபோது தான் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது, போதகரே என்று சொல்லி அவரை அழைத்தார்கள். நாம் கண் தெரிகிறவர்கள் மாதிரிதான் இருக்கிறோம், ஜெபிக்கிறவர்கள் மாதிரி தான் இருக்கிறோம், நல்லா இருக்கிறவர்கள் மாதிரிதான் இருக்கிறோம், ஆனால் ஆண்டவருக்கு முன்பாக நாம் போய் நிற்கும் போது அவருடைய பிரசன்னத்தில் நிற்கும் போது தான் தெரியும் நாம் கண்கள் திறக்கப்பட்டவர்களா, கண் மூடப்பட்டவர்களா என்று.எண்ணாகமம் 23 ஆம் அதிகாரத்தில் பிலேயாமை பாலாக் ராஜா இஸ்ரவேல் மக்களை சபிக்க அழைத்த போது ஆண்டவர் அவருடைய கண்களை திறந்தார். கழுதையை கொண்டு அவனோடு பேசினார். இறுதியாக அவன் சொல்லுகிறான் கண் திறக்கப்பட்டவன் சொல்லுகிறேன் என்று தன்னை சொல்லுகிறான். இன்றைக்கு ஆண்டவர் புத்தி மயக்கத்தில் இருக்கிற, கண் தெரியாத உங்களுக்கு, ஆவிக்குரிய கண்களை திறந்து, பரலோகத்தை பார்க்க அந்த இடத்திற்கு செல்ல ஆண்டவர் உங்கள் கண்களை திறந்தால் தான் நீங்கள் பார்வை அடைய முடியும், புத்தி அடைய முடியும். இன்றைக்கு நாமும் ஆண்டவர் இடத்தில் நாம் பார்வையடைய வேண்டும் என்று கேட்போம். ஆண்டவர் நமக்காக ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிற சகல ஆசீர்வாதங்களையும் நாம் பார்க்கும்படிக்கு ஆண்டவரே இன்றைக்கு இந்த கண் மயக்கத்தில் இருந்து எனக்கு ஒரு விடுதலையை தாரும் என்று கேளுங்கள். என் கண்களை திறந்தருளும் என்று கேளுங்கள். அவர் நம் கண்களை திறந்தால் தான் நம்மால் தெளிவாக பார்க்க முடியும் .மோசே மரிக்கும்போது 120 வயது உள்ளவனாக இருந்தான், அவன்

கண்களில் பார்வை குறையவே இல்லை, பார்வை மங்கவே இல்லை என்று வேதம் சொல்லுகிறது. ஆண்டவர் அவருடைய நாட்களுக்கு தக்க பலனை அவருக்கு கொடுத்தார். கர்த்தர் உங்களுடைய கண்களைத் திறந்தால் வசனம் உங்களுக்கு வழிகாட்டும், நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்கு காட்டுவேன், உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன் என்று வார்த்தையின்படி நீங்கள் நடக்க வேண்டிய வழியை உங்களுக்கு போதிக்கும். இது தெரியாமல் நீங்கள் உங்கள் நம்பிக்கையை ஒரு ஊழியர் மீது வைக்கும் போது அது குறிசொல்லுதலாக மாறிவிடுகிறது. அது பிலேயாம் செய்தது போல் ஆகிவிடுகிறது. வெளிநாடுகளுக்கு நாங்கள் ஊழியத்துக்கு செல்லும்போது அங்கு அவர்கள் வேதம் கொண்டு வருவதில்லை, கண்களை மூடி ஜெபிப்பதில்லை. ஆனால் எங்களிடத்தில் ஜெபிக்க வரும்போது எங்களை குறித்து ஆண்டவர் உங்களிடத்தில் என்ன சொல்லுகிறார் என்பதை நீங்கள் ஜெபித்து எங்களுக்கு சொல்லுங்கள் என்று கேட்பார்கள். ஊழியம், ஜெபம் என்பது சோசியம் அல்ல என்பதை நீங்கள் புரிய வேண்டும்.

ஆகார் கண் மயக்கத்தில் இருந்தபோது அவ்வளவு பெரிய நீரூற்று அருகில் இருந்தும் அவளுக்கு தெரியவில்லை. கர்த்தர் நமக்காக உண்டு பண்ணி வைத்திருக்கிறதை நம் கண்கள் காணவில்லை, காதுகள் கேட்கவும் இல்லை, அது நம் மனதில் தோன்றவும் இல்லை என்று வேதம் சொல்கிறது. ஆகார் என் பிள்ளை சாகிறதை நான் பார்க்க முடியாது ஆண்டவரே என்று சொல்லி அழுது கண்ணீரோடு ஜெபித்த போது கர்த்தர் அவளுடைய கண்களில் இருக்கிற அந்த மயக்கத்தை எடுத்து போட்டு, கண்களில் தெளிவை தந்து நீரூற்றை காணும்படி செய்தார். எனக்கு வேலை கிடைக்கவில்லை, திருமண நடக்கவில்லை, குழந்தை பாக்கியம் இல்லை என்று சொல்லி முறையிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் ஆண்டவரிடத்தில் ஆயிரம் வழிகள் உண்டு. நீங்கள் அவரை தேடி அவருடைய சமூகத்திற்கு வந்தீர்களானால் அவர் அனைத்து ஆசீர்வாதங்களையும் உங்களுக்கு தருவார். என்னால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ என்று தேவன் சொல்லுகிறார். இன்றைக்கு இந்த கண் மயக்கத்தில் இருந்து உங்களுக்கு விடுதலை தரப் போகிறார். ஆகையால் புத்தியில்லாத கலாத்தியரே எத்தனை நாட்களுக்கு தேவன் ஆயத்தம் பண்ணினதை, அவர் உண்டு பண்ணி வைத்திருக்கிறதை நீங்கள் புறக்கணித்துவிட்டு இருப்பீர்கள். இன்றைக்கு இந்த மயக்கத்தில் இருந்து தேவன் உங்களை விடுதலையாக்கப் போகிறார். தேவன் உங்களுக்கு பயமுள்ள ஆவியை கொடாமல், பலமும், அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியை தந்திருக்கிறார். ஒரு போராட்டம், ஒரு பிரச்சனை, ஒரு எதிர்ப்பு, ஒரு தடை வந்தால் நமக்கு இரண்டு மடங்கு மூளை வேலை செய்ய வேண்டும். இதற்கு ஒரே வழி பரத்திலிருந்து வருகிற ஞானம், கலப்படமில்லாத ஞானம், உன் எதிரி ஒருவரும் மேற்கொள்ள முடியாத ஞானம், இந்த வல்லமையை உங்களுக்கும் இன்றைக்கு தந்து உங்களை அந்த மயக்கத்தில் இருந்து விடுதலையாக்குவார்.

## ஐசுவரியத்தின் மயக்கம்

முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப்போடுகிறதினால், அவனும் பலனற்றுப்போவான் மத்தேயு 13:22 இன்றைக்கு அநேகர் உலக காரியங்களில் அதிகம் கவலை கொள்ளுகிறார்கள். இன்னும் நான் வீடு கட்டவில்லை, இன்னும் என் மகளை, மகனை நான் கரை சேர்க்கவில்லை, இன்னும் எனக்கு

வரவேண்டியது வந்து கிடைக்கவில்லை என்று சொல்லி புலம்புகிறார்கள். உங்களை வாழ வைத்தவர் உங்கள் பிள்ளையையும் வாழ வைப்பார். நீங்கள் வளர்த்தால் உங்கள் பிள்ளைகளை வளர்க்க முடியாது அதை ஆண்டவரிடம் கொடுத்தால் அவர் உங்களுக்கு வளர்த்து தருவார். நீ உன் பிள்ளையை தேவனுடைய பலிபீடத்தில் வைத்துவிடு, அன்று பலிபீடத்தில் வைக்கப்பட்ட ஈசாக்கின் மேல் கை போடாதே என்று சொல்லி அவனை ஆசீர்வதித்து, தேசங்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றின தேவன், உன் பிள்ளையையும் ஆசீர்வதித்து, தேசங்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றுவார். முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் ஐசுவரியத்தின் மயக்கத்தினால் நிறைந்திருந்தார்கள். அவர்கள் பணம் சம்பாதிக்கனும், வட்டிக்கு விடனும் என்று பணம் சம்பாதிப்பதில் குறியாக இருக்கிறார்கள். உலக ஆடம்பரங்கள், வசதி வாய்ப்புகள் கொஞ்சம் வந்து விட்டால் போதும் அவர்களை பிடிக்க முடியாது. ஒரு நாளும் ஆடம்பரத்திற்கும், வசதி வாய்ப்பிற்கு இடம் கொடுத்து தேவனை விட்டுவிடாதீர்கள். ஐசுவரியத்தின் மயக்கம் என்பது என் பேரில் இத்தனை வீடுகள் இருக்கிறது என்ற பெருமை. நம்மிடம் பெருமிதம், மேட்டிமையும் இருக்கக் கூடாது. நமக்கு ஒரே ஒரு வீடு தான் அது பரலோகத்தில் இருக்கிறது. அந்த வீட்டை உனக்காக கட்டுகிறவர், உனக்கு தருகிறவர் இயேசு. நீ இந்த உலகத்தில் நடக்கிற நடக்கைகள், உன் கிரியைகள், உன் நீதி உத்தமாம் கர்த்தருக்கு கீழ்ப்படிதல், பரிசுத்த வாழ்க்கை, ஆவிக்குரிய வாழ்க்கை, ஊழியம், ஜெபம் இவைகளை தான் ஒவ்வொரு செங்கலாக வைத்து தேவன் உனக்காக பரலோகத்தில் ஒரு வீட்டைக் கட்டுகிறார், ஆயத்தம் செய்கிறார். ஆண்டவர் சொல்லுகிறார் அநேக வீடுகளை கட்ட நான் அஸ்திபாரம் போட்டு விட்டேன், ஆனால் அதை கட்ட முடியவில்லை. அவர்களுடைய நீதியின் பலன் எனக்கு வந்து சேரவில்லை என்கிறார். கணவன் மனைவி சண்டை, கள்ள உறவுகள், தீமைகள் பெருகி கொண்டிருக்கிறது. என் நாமத்தை வைத்து அநேகரை கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள், பணம் சம்பாதித்து கொண்டிருக்கிறார்கள். மேய்ப்பர்கள் மந்தையை அல்லவா மேய்க்க வேண்டும், ஆனால் தங்களை மேய்த்துக் கொள்கிறவர்களுக்கு ஐய்யோ என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகையால் இந்த வீடு அஸ்திபாரத்தோடு நிற்கிறது, ஆகவே தான் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் புத்தியில்லாத கலாத்தியரே ஆவியில் வாழ்க்கையை ஆரம்பித்த நீங்கள் மாம்சத்தை நோக்கி, உலகத்தை நோக்கி போய்க் கொண்டிருக்கிறீர்கள் என்கிறார். வெளிப்படுத்தல் 2:4-ல் எபேசு சபையைக் குறித்து சொல்லும் போது ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. என்று கர்த்தர் சொல்லுகிறார். வீடு கட்டியும் கரண்டு இணைப்பு கிடைக்கவில்லை, லைட் எரியவில்லை காரணம் நீங்கள் ஜெபிக்கவில்லை என்றால் உங்கள் வீடு இருளடைந்து கிடக்கும். நீ உயிர் உள்ளவன் என்று சொல்லியும் மரித்தவனுடைய நிலையில் இருக்கிறாய். நீ இந்த நிலையிலிருந்து விழுந்தாய் என்பதை எண்ணி, உன் விளக்கை தண்டின் மேல் வை, மரக்காலில் போட்டு மூடி வைக்காதே, கட்டிலின் கீழ் வைக்காதே, உலகத்துக்காக வாழாதே தேவனுக்காக வாழ தீர்மானி. உங்களுக்காக தேவன் தூதர்களை ஏற்படுத்தி இருக்கிறார், உங்களை காக்கும்படிக்கு தூதர்களுக்கு கட்டளையிட்டேன் என்று சொல்லுகிறார். உங்களுக்கு தேவன் ஏற்படுத்தினதையெல்லாம் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, நான் ஏன் ஜெபிக்கனும், எதற்காக கண் விழிக்கனும், நான் இஷ்டப்பட்டால் தான் ஜெபிப்பேன் என்கிறீர்கள். நமக்குள் ஒரு ஆத்துமா இருக்கிறது, இந்த சரீரம் மண்ணுக்கு போகும், ஆனால்

நம்முடைய ஆத்துமா நித்தியத்திற்கு போக வேண்டும். ஆத்துமா நித்தியமாக அவரோடு வாழ வேண்டும். ஆத்துமா விலையேறப்பெற்றது. அதற்குத்தான் நாம் ஒவ்வொரு நாளும் ஜெபிக்க வேண்டும். சங் 115:17,18-ல் மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள். நாமோ, இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்திரிப்போம் என்று வேத வசனம் சொல்லுகிறது. சவுல் ராஜா தனக்கு பின்பு தன் மகன் தான் ராஜாவாக வேண்டும் தாவீது ராஜாவாகக் கூடாது என்றும், நான் ராஜாவாக இருக்கும் போதே எனக்கு ஆயிரமும், தாவீதுக்கு பதினாயிரம் என்று பெண்கள் பாடுகிறார்களே, இது நல்லதல்ல என்று சொல்லி தாவீதை ஓட ஓட துரத்திக் கொண்டே இருந்தான். ஒரு கட்டத்தில் சவுலும் அவனுடைய படைவீரரும் மலையின் அந்த பக்கம் உறங்கிக் கொண்டிருக்கும்போது தாவீது அந்த இடத்திற்கு சென்று சவுலின் தலைமாட்டில் இருந்த ஈட்டியையும், தண்ணீர் செம்மை எடுத்துக் கொண்டு வந்து விட்டான். தூரத்தில் வந்த பிறகு சவுலை நோக்கி கூப்பிட்டு உம்முடைய ஈட்டி எங்கே? உம்முடைய செம்பு எங்கே? என்று பாரும், உம்மை காவல் காக்கும்படிக்கு நீர் வைத்திருந்த உன் காவலாளிகள் ஒருவர் கூட விழித்திருக்கவில்லையா?, இன்றைக்கு தேவன் உம்முடைய ஜீவனை என் கையில் ஒப்புக்கொடுத்திருந்தார் என்று சொன்னான். நாளொன்று வரும் கர்த்தரை தேடாத, நம்பாத ஒவ்வொருவருடைய ஜீவனும் நம்முடைய ஜெபத்தினால் பிழைக்கும். இன்றைக்கு இந்த மயக்க நிலையில் இருந்து உங்களை ஒரு விழிப்பு தன்மைக்கு தேவன் கொண்டு வரப்போகிறார். தூங்குகிற நீ, மயக்கத்தில் இருக்கிற நீ, தூசியை உதறிவிட்டு எழுந்திரு, மரித்தோரை விட்டு எழுந்திரு, கிறிஸ்து உன்னை பிரகாசிக்கச் செய்வார். சாத்தான் உன்னை இருளில் இருக்க பண்ணுவான் கிறிஸ்து உன்னை பிரகாசிக்கச் செய்வார். இயேசு கிறிஸ்து இந்த மயக்கத்தில் இருந்து உங்களுக்கு விடுதலை தந்து, புத்தியில் ஒரு வெளிச்சத்தை கொடுத்து, உன் வாழ்க்கையில், வேலையில், தொழிலில், ஜெப ஜீவியத்தில், ஊழியத்தில் பிரகாசிக்கும்படி செய்யப் போகிறார். உங்கள் உயர்வை யாரும் தடுக்க முடியாது. உங்களை யாரும் ஏமாற்ற முடியாது. சாத்தான் வைத்த கண்ணியில் அவன் தான் விழுவான். பிசாசின் மயக்கத்திலிருந்து நீங்கள் தெளிவடைந்து கர்த்தராலே ஆட்கொள்ளப்படுவீர்கள். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் எல்லா மயக்கத்திலிருந்தும் விடுதலையாக்கி, தெளிவை தந்து ஆசீர்வதித்து நடத்துவாராக.


'என் பிள்ளைகள்'

ஆசீர்வாத ஜெபத்திட்டம்

1. உங்கள் பிள்ளைகளின் ஆசீர்வாதத்திற்காக, தேவ பாதுகாப்பிற்காக, படிப்பிற்காக, சுகத்திற்காக அனுதின பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.
2. உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை குறித்த கலக்கம் மற்றும் பயம் நீங்க,
3. அவர்களை குறித்த தேவ திட்டம் நிறைவேற
4. வயதுவரம்பு 24 வரை

இத்திட்டத்தில் இணைந்திட அழையுங்கள்
9442800449, 9442800447
Watsapp மூலம் இணைய 9442800447

இன்றே இணைந்திடுங்கள் உங்கள் பிள்ளைகளின் விண்ணப்பங்களுக்காக அனுதினமும் பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.



# நான் உன்னிடத்திற்கு திரும்ப வருவேன்



சகோதரி.கலா வின்சென்ட்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். கிறிஸ்துவில் பிரியமானவர்களே, நாம் ஒரு இடத்திலிருந்து ஒரு வேலையாக வெளியே செல்லும்போது நாம் தங்கும் இடத்திற்கு திரும்ப எப்பொழுது வருவோம் என்பதை தீர்மானித்து சொல்லிவிட்டு செல்கிறோம், அதன்படியே திரும்ப வருகிறோம். இயேசு தம் சீஷர்களை விட்டு போகிற காலம் வருகிறதை அறிந்து, நான் போய் ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணின பின்பு உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன் என்று சொல்லிவிட்டு யோவான் 14:18-ல் நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்திற்கு வருவேன் என்று சொன்னார். அதேபோல் மேல் வீட்டிலே கூடி ஜெபிக்கும் போது ஆவியானவர் காற்றாய் அக்கினிமயமான நாவுகளாக பிரிந்து ஒவ்வொருவர் மீதும் இறங்கி வந்தார். இன்றைக்கு தாகத்தோடு, வாஞ்சையோடு ஜெபிக்கும், கேட்கும் ஒவ்வொருவர் தாகத்தையும் தீர்க்க ஆவியானவர் மழையாக இறங்கி வருகிறார் ஒவ்வொரு உள்ளத்தையும் நிரப்புகிறார்.

## உன்னிடத்திற்கு திரும்ப வருவேன்

ஆபிரகாமுக்கு பிள்ளை இல்லை. ஆபிரகாம் கர்த்தராகிய ஆண்டவரே அடியேனுக்கு என்ன தருவீர் நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேன் என்று ஜெபித்தும் தாமதமானதும் திரும்ப தரிசனமாகி நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு, நான் உன்னோடு என் உடன்படிக்கையை ஏற்படுத்தி உன்னை திரளாய் பெருகப் பண்ணுவேன் என்றார். பின்னும் தாமதமாகிக் கொண்டே இருக்கும்போது தான் ஆதியாகமம் 18:14-ல் கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? ஒரு உற்பவகாலத்திட்டத்தில் உன்னிடத்திற்கு திரும்ப வருவேன் அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். நம் ஆண்டவர் திரும்ப நம்மிடத்தில் வந்து நம் விசுவாசத்தைப் பலப்படுத்தி அற்புதம் செய்கிறவர். ஒருவேளை முதல் முறை அடியேனுக்கு என்ன தருவீர் என்று கேட்டிருந்தாலும் அடுத்த முறை கர்த்தர் சொன்னதை விசுவாசித்து தன் வீட்டிலுள்ள ஆண் பிள்ளைகள் எல்லாருக்கும் விருத்தசேதனம் பண்ணி கீழ்ப்படிந்தான். அதன் பிறகு இந்த வார்த்தைகள் சொல்லப்படுகிறது உற்பவகாலத்திட்டத்தில் உன்னிடத்திற்கு திரும்ப வருவேன் என்று சொன்னபடியே ஆதியாகமம் 21:1,2-ல் கர்த்தர் தம் சொல்லியிருந்தபடியே சாராள் பேரில் கடாட்சமானார். கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்கு செய்தருளினார்.

ஆபிரகாம் முதிர்வயதாய் இருக்கையில் சாராள் கர்ப்பவதியாகி தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள், தான் சொல்லி இருந்தபடியே, தாம் உரைத்தபடியே சாராளுக்கு செய்த தேவன் இதை வாசித்துக் கொண்டிருக்கும் உங்கள் வாழ்க்கையில் செய்யமாட்டாரா, கட்டாயம் நீங்கள் எதிர்பார்க்கிற நன்மையை உங்கள் வாழ்வில் செய்ய திரும்ப நம்மிடத்தில் வருவேன் என்று சொல்லுகிறார். நம்முடைய நம்பிக்கை எல்லாம் அற்றுப்போன நிலையில் நாம் இருக்கலாம், இவ்வளவு நாள், வருஷம் காத்திருந்து விட்டேனே, இனி என்ன நடக்கப் போகிறது என்று எண்ணி இருக்கலாம். அந்த நிலையில் வந்துவிட்ட உங்களிடத்திற்கு தான் திரும்ப வருவேன் என்கிறார்.

## உயிர் திரும்ப வந்தது

சிம்சோனுக்கு விரோதமாய் பெலிஸ்தியர் ஆரவாரம் செய்த போது கர்த்தருடைய ஆவி அவன் மேல் பலமாய் இறங்கினதினால் கழுதையின் பச்சை தாடை எலும்பை எடுத்து ஆயிரம் பேரைக் கொன்றான். அதன் பிறகு அவனுக்கு தாகம் எடுத்தது நியாயாதிபதிகள் 15:18,19-ல் அவன் மிகவும் தாகமடைந்து கர்த்தரை நோக்கி கூப்பிட்டு தேவரீர் உமது அடியேன் கையினாலே இந்த பெரிய இரட்சிப்பை கட்டளையிட்டிருக்க விருத்தசேதனம் இல்லாதவர்கள் கையில் விழ வேண்டுமா என்ற போது தேவன் லேகியிலுள்ள பள்ளத்தாக்கை பிளக்கப் பண்ணினார். அதிலிருந்து தண்ணீர் ஓடி வந்தது, அவன் குடித்த போது அவன் உயிர் திரும்ப வந்தது, அவன் பிழைத்தான். இன்றைக்கு சரீரத்தில் ஏதோ வலி ஏற்பட்டால், வலி உயிர் போகிறது என்று பேச்சுப் பழக்கத்தில் சொல்வோம். வேலை பளு அதிகரித்தால், வேலையில் உயிரை எடுக்கிறார்கள் என்போம். அதுபோல ஏதோ ஒரு பிரச்சனையில் உயிர் போகும் நிலை போல போராடிக் கொண்டிருக்கிற நமக்கு உயிர் திரும்ப வரும்படி, நாம் தாகம் அடையாதபடி தேவன் ஜீவத்தண்ணீரை நமக்குத் தந்து நம் உயிர் திரும்ப வரும்படி செய்கிறார். யவீருவின் மகள் மரித்துப் போய்விட்டாள், இயேசு வந்து பிள்ளையின் கையைப் பிடித்து தலீத்தாகூமி என்றார். அதற்கு சிறுபெண்ணே எழுந்திரு என்று உனக்கு சொல்லுகிறேன் என்று அர்த்தமாம். உடனே சிறுபெண் எழுந்து நடந்தாள். எபேசியர் 2:1-ல் அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாக இருந்த உங்களை உயிர்ப்பித்தார் என்று பவுல் எழுதியிருக்கிறார். நேபுகாத்நேச்சார் வாழ்வில் பெருமைக்கு இடம் கொடுத்து நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று இருதயத்தில் சொன்னபோது, மாட்டைப் போல புல்லை மேய்ந்து மிருகமாகி விட்டான். அவனிடத்தில் இருந்த எல்லா நன்மைகளும், நல்ல விஷயங்களும் காணாமல் போய்விட்டது. தானியேல் 4:34-ல் அந்த நாட்கள் சென்றபின்பு, நேபுகாத்நேச்சாராகிய நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன், என் புத்தி எனக்குத் திரும்பிவந்தது; அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினேன், அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும் என்று சொல்லி தன் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து உன்னதமான தேவனை அவன் ஸ்தோத்தரிக்கத் தொடங்கின போது அவன் புத்தி அவனுக்கு திரும்ப வந்தது. சங்கீதக்காரன் சங்கீதம் 103:1-5-ல் என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, ஏன் தெரியுமா? அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெலாம் குணமாக்கி, உன்

பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னை கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடி சூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார். கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது என்கிறான். சங்கீதம் 85:6ல் உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களை திரும்ப உயிர்பிக்க மாட்டீரோ? என்று சங்கீதக்காரன் கேட்பது போல நாமும் ஜெபம் பண்ணும் போது நமது மாண்டு மடிந்த உயிர், ஆத்துமா திரும்ப வர தேவன் நமக்கு அநுக்கிரகம் செய்கிறார்.

## திரும்ப நிலைக்கப் பண்ணுவேன்

தாவீது பாவம் செய்தபோது அவன் கூடாரம் விழுந்து போனது. அதுவரை நிமிர்ந்து நின்றவன், உபவாசித்து ஆண்டவர் சமூகத்தில் விழுந்து கிடந்தான். அவன் பச்சேபாளிடத்தில் பெற்ற பிள்ளை, தவறான சகவாசத்தால் பிறந்த பிள்ளை செத்துப் போயிற்று. ஆனால் தாவீது ஆண்டவரிடம் அழுது தன்னை ஆராய்ந்து பார்த்து, தாழ்த்தி ஒப்புக்கொடுத்து விட்டான். சகரியா 10:6-ல் நான் யூதா வம்சத்தாரைப் பலப்படுத்தி, யோசேப்பு வம்சத்தாரை இரட்சித்து, அவர்களை திரும்ப நிலைக்கப் பண்ணுவேன், நான் அவர்களுக்கு இரங்கினேன், அவர்கள் என்னால் ஒருக்காலும் தள்ளிவிடப்படாதவர்கள் போல் இருப்பார்கள். நான் அவர்கள் தேவனாகிய கர்த்தர், நான் அவர்களுக்குச் செவி கொடுப்பேன் என்று கர்த்தர் திரும்ப தாவீதை நிலைக்கப் பண்ணினார். ஆமோஸ் 9:12 அந்நாளில் விழுந்து போன தாவீதின் கூடாரத்தை நான் திரும்பஎடுப்பி-த்து, அதின் திறப்புகளை அடைத்து அதில் பழுதாய்ப் போனதைச் சீர்படுத்தி, பூர்வ நாட்களில் இருந்தது போல அதை எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து அதில் பழுதாய்ப் போனதைச் சீர்படுத்தி, பூர்வ நாட்களில் இருந்தது போல அதைஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்ற வார்த்தையின்படி கர்த்தர் திரும்ப நம்மை நிலைக்க பண்ணுகிறவர். விழுந்து போன ஒரு கூடாரம் திரும்ப எழுந்திருக்க முடியுமா? நாளெல்லாம் பரிசுத்தமாய் வாழ முடியுமா? என் பெயர் கெட்டுப்போனதே திரும்ப நற்பெயர் வருமா? நான் தலைநிமிர்ந்து நடக்க முடியுமா? என்றிருந்த தாவீதை திரும்ப அவன் கூடாரத்தை எடுப்பித்து நிலைக்கப் பண்ணி, அதிலிருந்த பழுதெல்லாம் நீக்கி பூர்வ நாட்களில் இருந்தது போல ஸ்தபிப்பேன், நிலைக்கப் பண்ணுவேன் என்றவர் பொய் சொல்லுவாரோ. எரேமியா 18:4-ல் குயவன் வனைந்துகொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று; அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான். எரேமியாவை குயவன் வீட்டிற்கு போகச் சொன்னார் கர்த்தர். குயவன் வளைந்து கொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப் போயிற்று, அப்பொழுது அதை திருத்தமாய் செய்யும்படிக்கு தன் பார்வைக்கு சரியாய் கண்டபடி குயவன் அதை திரும்ப வேற ஒரு பாண்டமாக வனைந்தான் என்பதை எரேமியா பார்த்தான். இஸ்ரவேல் குடும்பத்தாருக்கு இந்த குயவன் செய்தது போல நான் செய்யக்கூடாதோ என்று ஆண்டவர் கேட்கிறார். இடிந்து போன,

ஜெப உதவிக்கு
94428 00449
94428 00447
94980 00449



கெட்டுப் போனதை திரும்ப தன் பார்வைக்கு சரியாய் கண்டபடி நான் வனைவேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். சங்கீதம் 68:23-ல் என்னுடைய ஜனத்தை பாசானிலிருந்து திரும்ப அழைத்து வருவேன் அதை சமுத்திர ஆழங்களில் இருந்து திரும்ப அழைத்து வருவேன் என்று ஆண்டவர் சொன்னார். இதுவரை சிறைப்பட்டுப்போன ஆழங்களில் இருந்தும் திரும்ப ஆண்டவர் அழைத்து வருவார். ஓசியா 12:9-ல் உன்னை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்தது முதற்கொண்டு உன் தேவனாயிருக்கிற நான் பண்டிகை நாட்களில் செய்யப்படுகிறது போல திரும்பவும் உன்னை கூடாரங்களில் தாபரிக்க பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று ஓசியா தீர்க்கதரிசி மூலம் ஆண்டவர் சொல்லுகிறார்.ஆபிரகாம் வாழ்க்கையைப் பாருங்கள், உன் இனத்தையும் தேசத்தையும் விட்டு நான் உனக்கு காண்பிக்கிற தேசத்துக்கு போ என்று ஆண்டவர் அழைத்தபடியினால் புறப்பட்டு ஆதியாகமம் 12:8-ல் பெத்தேலுக்கு கிழக்கே இருக்கும் மலைக்குப் போய் பெத்தேல் தனக்கு மேற்காகவும் ஆயி தனக்கு கிழக்காகவும் இருக்க கூடாரம் போட்டு அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை கட்டி கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டான். ஆனால் அத்தேசத்திலே பஞ்சம் உண்டான போது எகிப்து தேசத்திலே தங்கும்படி அவ்விடத்திலிருந்து போனான் என்று பத்தாம் வசனம் சொல்லுகிறது. எகிப்திலே பல போராட்டங்கள். சாராள் அழகுள்ள ஸ்திரி என்று அவன் என்னை உன் சகோதரன் என்று சொல்லு என்றான். அதினிமித்தம் பார்வோன் அரண்மனைக்கு சாராள் கொண்டு போகப்பட்டாள், அவள் நிமித்தம் அவர்களுக்கு வாதை உண்டானது. பார்வோனால் கடிந்து கொள்ளப்பட்டு திரும்ப அனுப்பப்பட்டாள். அதன் பிறகு ஆதியாகமம் 13:3,4-ல் ஆபிரகாம் பெத்தேலுக்கும் ஆயிக்கும் நடுவாக தான் முன்பு கூடாரம் போட்டதும், தான் முதல்முதல் ஒருபலிபீடத்தை உண்டாக்கினதுமான ஸ்தலமட்டும் போனான். அங்கே ஆபிரகாம் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டான். அவனைத் திரும்ப நிலைக்கப் பண்ணின கர்த்தர், நாம் ஒருவேளை வழிவிலகி, திசைமாறி எங்கு போயிருந்தாலும், நம்மை பாசானிலிருந்தும், சமுத்திர ஆழங்களிலிருந்து அழைத்து வந்து நம்மையும் நிலைக்கப் பண்ணுவார். எகிப்திலிருந்து அழைத்து வந்து திரும்பவும் கூடாரங்களில் தாபரிக்கப் பண்ணுவார்.

## திரும்ப அளிப்பேன்

யோவேல் தீர்க்கதரிசன புத்தகத்தில் ஆசாரியர்கள் பலிபீடத்துக்கும், மண்டபத்துக்கும் நடுவாக அழும்போது யோவேல் 2:25-ல் நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும் பச்சைகிளிகளும் முசுக்கட்டை பூச்சிகளும் பச்சை புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஏற்கனவே சிறப்பாய் இருந்த ஒன்று பட்சிக்கப்பட்டு காணாமல் போனது. ஒன்றும் இல்லாத நிலையில் ஆசாரியர்கள் அழுது கண்ணீரோடு ஜெபம் பண்ணுகிற போது போஜனபலியும் பானபலியும் நிறுத்தப்பட்டது. விதைகள் மண் கட்டிகள் நடுவே மக்கிப்போயிற்று, களஞ்சியங்கள் இடிந்து போயின, பாழாய் கிடக்கிற சூழ்நிலையை பார்த்து கண்ணீர் வடிக்கிறவர்கள் நிமித்தம் பட்சித்த வருஷங்களின் விளைவை நான் திரும்ப அளிப்பேன், என் ஜனங்கள் ஒருக்காலும் வெட்கப்பட்டுப் போவதில்லை என்று ஆண்டவர் சொல்லுகிறார். நம் ஆண்டவர் இயேசு நம்மிடத்தில் திரும்ப வந்து நமக்கு உயிர் கொடுத்து, புத்தியை தந்து நிலைக்கப் பண்ணி, இழந்த எல்லாவற்றையும் நமக்கு திரும்ப தருவார். இந்த செய்தியை வாசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் இந்த கிருபைகளை தந்தருளுவாராக.



# ஆசீர்வாத உபவாச ஜெபம்

தேவனுடைய பெரிதான கிருபையினால் நமது வானத்தின் வாசல் சுவிசேஷ மையத்தில் வைத்து நடைபெறுகின்ற ஆசீர்வாத உபவாச ஜெபத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து வருகின்றார். கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத்தில் திரளான மக்கள் புதிதாக வந்து கலந்து கொள்ள தேவன் அநுக்கிரகம் செய்தார். நம் சகோதரி அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வாயிலாக மக்களை தேவபிரசன்னத்தில் நடத்தினார்கள். அநேகர் ஆவி  ஆத்துமா சரீரத்தில் விடுதலையை பெற்றார்கள். நம் சகோதரர் அவர்கள் தேவவார்த்தையை பிரசங்கித்த போது மக்கள் அவர்களை மயக்கியிருந்த எல்லா மயக்க நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு மனத்தெளிவை அடைந்து தேவனுக்கு தங்களை அர்ப்பணித்தார்கள். ஜெபத்திற்கு வந்திருந்த ஒவ்வொருவருக்கும் ஆவிக்குரிய ஆகாரத்தோடு சரீரப்பிரகாரமான ஆகாரம் வழங்க தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

# தடைகளை நீக்கும் தயாபரர்



**சகோதரி. பிரின்ஸி – ராம்நாடு**

எனக்கு இரண்டு குழந்தைகள். முதலில் பெண்குழந்தை, இரண்டாவது ஆண்குழந்தை. என் மகன் மூன்று வயது வரைக்கும் பேசவே இல்லை. அம்மா அப்பா என்று கூட சொன்னதில்லைலை. ஒரு வார்த்தை கூட அவன் பேசினதே இல்லை. எப்பொழுதும் அழுது கொண்டே இருப்பான். ஏன் அழுகிறான், எதற்கு அழுகின்றான் என்று தெரியாது மிகுந்த மனவேதனையாக இருக்கும். இந்நிலையில் நாங்கள் அவனை மருத்துவரிடம் அழைத்துச் சென்றோம். அவர்கள் பரிசோதித்து விட்டு காது நன்றாக கேட்கிறது ஆனால் ஆட்டிசாம் பாதிப்பு மாதிரி இருக்கிறது. இதற்காக நீங்கள் தொடர்ந்து குறைந்தது 10 ஆண்டுகள் மருத்துவம் பார்த்த பிறகு தான் உங்கள் மகன் நன்றாக பேசுவான் என்று சொல்லி விட்டார்கள். நான் செம்பட்டி வானத்தின் வாசலில் நடைபெற்ற ஸ்தோத்திர ஜெபத்தில் கலந்து கொண்டு என் மகனுக்காக ஜெபித்துவிட்டுச் சென்றேன். மதுரையில் உள்ள மருத்துவர்கள் அவனை பரிசேதித்து பார்த்து விட்டு இது ஆட்டிசம் இல்லை ADHD-யாக இருக்கு என்றார்கள். அதற்காக மருத்துவம் செய்ய ஆரம்பித்தார்கள். உங்கள் மகன் நன்றாகப் பேச குறைந்தது 10 ஆண்டுகள் ஆகும் என்று சொன்ன மருத்துவர் ஆச்சரியப்படும் விதத்தில் 10 மாதத்திலேயே என் மகனை தேவன் பேச வைத்தார். தற்போது அவன் நல்ல தெளிவாக பேசுகின்றான். தேவாதி தேவனுக்கு எல்லா மகிமையும் கனமும் உண்டாவதாக.

**சகோதரி. ரமணி – மதுரை**

எனக்கு திருமணமாகி நான் மதுரைக்கு வந்து 50 வருடங்களாக நல்ல வீடு, நான் விரும்புகின்ற மாதிரியான வீடு எனக்கு கிடைக்கவில்லை. நல்ல வீட்டிற்காக அநேக நாட்கள் நான் ஏங்கினது உண்டு. இந்த நிலையில் நான் மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்தில் வந்து கலந்து கொண்டு மனநிறைவான வீடு எனக்கு கிடைக்க வேண்டும் என்று ஜெபித்துவிட்டு சென்றேன். கர்த்தர் ஜெபத்திற்கு பதில் தந்தார். வீட்டிற்காக ஏங்கித் தவித்த எனக்கு 10 லட்சம் ரூபாய்க்கு ஒரு நல்ல வீட்டை தேவன் தந்தார். என் சொந்த பந்தங்களுக்கு முன்பாக என் தலையை உயர்த்தினார். மேலும் எனக்கு இரண்டு பேரன்கள் வேண்டும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையோடு கேட்டேன். மனவிருப்பங்களை நிறைவேற்றுகின்ற தேவன் நான் அவரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்திற்கு பதில் தந்து இரண்டு பேரன்களைத் தந்தார். அந்த தேவாதி தேவனுக்கு கோடான கோடி நன்றி.

**சகோதரி. பிரேமா – விளாச்சேரி**

கடந்த 2022-ஆம் ஆண்டு ஜுலை மாதம் மதுரை எழுப்புதல் உபவாச கூட்டத்திற்கு நான் வந்திருந்தேன். அப்பொழுது சகோதரர் மற்றும் சகோதரி மூலமாக தேவன் என்னோடு பேசினார். எனக்காக நீ என்ன செய்யப் போகிறாய் என்ற இந்த வார்த்தையின் மூலமாக திரும்ப திரும்ப பேசிக் கொண்டே இருந்தார். வீட்டிற்குப் போய் நான் ஆண்டவரிடம் ஜெபித்து உமக்காக கட்டாயம் நீர் விரும்புகிறதைச் செய்வேன் என்று என்னை அர்ப்பணித்தேன். அன்றிலிருந்து இன்று வரை இலவச கல்வி மூலம் இயேசுவைப்பற்றி அநேகருக்குச் சொல்லி அவரண்டையில் நடத்தி வருகின்றேன். அவர் நாமம் மகிமைப்பட அவர் சித்தத்தை செய்ய கிருபை செய்த தேவனுக்கு எல்லா மகிமையும் உண்டாவதாக

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு

## இணைந்து

# சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்

தேவன்.
தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார்.

அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமையமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும் விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (கொரிந்தியர் 3:7) இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் பாடுபட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

### 1.BANK TRANSFER

**Union Bank of India**

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI, MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

**AXIS BANK**

| | | |
|---|---|---|
| A/C NAME | : | L. VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0000109 |

### 2.இணையதளம் (WEBSITE)

WWW.JESUSLIVES.IN

### 3.காசோலை (CHEQUE)

JESUS LIVES TRUST (OR)
L.VINCENT RAJ

### 4. (GOOGLE PAY)

+91 944 3009 333

### 5. மணியார்டர் (E.M.O)

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ - காலனி
பரவை, மதுரை - 625 402.

### 6. Whatsapp

9442800449 என்ற எண்ணிற்கு DONATE என்று டைப் செய்து அனுப்பி WHATSAPP மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை செலுத்தலாம்.

> நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கான காணிக்கைகளை வங்கி கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்து விபரத்தை 944 2800 447 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இந்த எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# யுபிஐ - இனி எதற்கு கட்டணம் வசூலிக்கப்படும்? யார் செலுத்த வேண்டும், எது இலவசம்?




யுபிஐ பரிவர்த்தனைகள் தொடர்பாக இந்திய தேசியக் கொடுப்பனவுக் கழகம் (NPCI) ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதுகுறித்து நுகர்வோர் மத்தியிலும் வணிகர்கள் மத்தியிலும் பல கேள்விகள் எழுந்துள்ளன. இந்த அறிவிப்பின்படி, 2,000 ரூபாய்க்கு மேற்பட்ட தனிநபர்-வணிகர் (P2M) யுபிஐ பரிவர்த்தனைகளுக்கு 0.4% கட்டணம் வசூலிக்கப்படும். உதாரணமாக, ரூ.5,000 பரிவர்த்தனை செய்தால் 20 ரூபாய் கட்டணமாகச் செலுத்த வேண்டியிருக்கும். இந்தக் கட்டணம் அதிகபட்சமாக 300 ரூபாயைத் தாண்டாது. இந்தக் கட்டண முறை அக்டோபர் 15 முதல் செயல்பாட்டுக்கு வரும். யுபிஐ பரிவர்த்தனைகள் மீதான இந்தக் கட்டணங்கள் சாதாரண நுகர்வோரைப் பாதிக்காது என அரசு கூறி வருகிறது. இந்தப் புதிய கட்டண விதிப்பு அறிவிப்பின்படி, தனிநபர் ஒருவர் மற்றொரு தனிநபருக்கு செய்யும் பரிவர்த்தனைகள் மீது எந்தத் தாக்கத்தையும் செலுத்தாது. அதாவது, அவற்றுக்கு கட்டணம் இல்லை. தனிநபர்களுக்கு இடையிலான பரிவர்த்தனை, அது எவ்வளவு தொகையாக இருந்தாலும் கட்டணமின்றியே இருக்கும். அதேநேரம், வணிகர்களுக்கு நுகர்வோர்கள் ரூ.2000 வரை செய்யும் பரிவர்த்தனைகளும், சிறு வணிகர்களுக்கு பூஜ்ஜிய எம்டிஆர் Zero MDR, அதாவது கட்டணமில்லா யுபிஐ பரிவர்த்தனைகளும் கட்டணமின்றியே தொடரும். இதனால், நுகர்வோர் - வணிகர்கள் இடையே நடைபெறும் சுமார் 96% பரிவர்த்தனைகள் பாதிக்கப்படாது. மாறாக, 2,000 ரூபாய்க்கு மேல் நடைபெறும் குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே இத்தகைய கட்டணம் வணிகர்கள் மீது செயல்படுத்தப்படும்' என்று மத்திய நிதித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. ரூ.75,000 மற்றும் அதற்கு மேற்பட்ட தொகைக்கான பரிவர்த்தனைகளில், இந்தக் கட்டணம் ஒரு பரிவர்த்தனைக்கு அதிகபட்சம் ரூ.300 என வரையறுக்கப்படும். அதாவது, தனிநபர்கள் தொடர்ந்து வரம்பற்ற கட்டணமில்லா பயன்பாட்டைப் பெறுவார்கள். தற்போது அறிவிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் வணிகர்களுக்கே பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது. ஏற்கெனவே பலமுறை வரிகளால் பாதிக்கப்பட்டுள்ள வணிகர்கள் மீது மேன்மேலும் சுமை கூடும்' என்றும், மேலும், 'விலைவாசி உயர்வு நுகர்வோரை பெருமளவு பாதித்து வரும் நிலையில், யுபிஐ பணப் பரிவர்த்தனைக்கு கட்டணம் விதித்திருப்பது மேலும் வணிகர்களுக்கும் நுகர்வோருக்கும் பெரும் சுமை என்பதைக் கருத்தில் கொண்டும் விலைவாசி உயர்வுக்கும் வழிவகுக்கும், என்று வணிகர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள் 'பணப் பரிவர்த்தனை யுபிஐ கட்டணத்தை நிறுத்தி வைத்திட வேண்டும்' என்றும் வலியுறுத்தியுள்ளார்கள். மத்திய அரசு கூறுவது என்ன? பெரும்பாலான வணிகப் பரிவர்த்தனைகள் பாதிக்கப்படாது எனத்தெரிவித்து உள்ளது நிதித்துறை அமைச்சகம். 'இக்கட்டணம் சுமார் 4% வணிகப் பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே பொருந்தும். அதாவது, சுமார் 96% வணிகப் பரிவர்த்தனைகள் பாதிக்கப்படாது. ஏனெனில், அவை ரூ. 2,000க்கும் குறைவான பரிவர்த்தனைகளாக இருக்கும் அல்லது சிறு வணிகர்களுக்கான கட்டணமில்லா முறையின் கீழ் வரும். எனவே, இந்த நடைமுறை தனிநபர்கள், குறுந்தொழில்கள் மற்றும் சிறு வணிகங்களைப் பாதுகாப்பதுடன், அதிக மதிப்புள்ள வணிகப் பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்ட கட்டணத்தை அறிமுகப்படுத்துகிறது' என்றும் கூறியுள்ளது. மேலும், 'கட்டணங்கள் மற்றும் தீர்வுகள் அமைப்புச் சட்டம் 2007-ன் கீழ், இந்த நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொருந்தக்கூடிய கட்டண விகிதங்கள், செயல்பாட்டு ஏற்பாடுகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து யுபிஐ வழிகாட்டுக் குழு விரிவாக ஆலோசித்ததைத் தொடர்ந்து இந்த நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren 54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: SHARON PRINT SYSTEM, NO. 51/7,AHIMSAPURAM
FIRST STREET, EXTENSION, NEAR SARASWATHI THEATER,
SELLUR, MADURAI - 625002


அக்டோபர்
17
சனிக்கிழமை
9:30 AM - 2:00 PM
மதுரையில்
எழுப்புதல்
உபவாச ஜெபம்
Fasting Prayer
இடம்:
இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம்,
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம், PRC டிப்போ
அருகில், மதுரை.
தேவ செய்தி
Evg. VINCENTRAJ & Evg. KALAVINCENT
தொடர்புக்கு : 94980 00449, 94428 00449, 94428 00447
Jesus Lives MINISTRIES
இராமநாதபுரத்தில்
அறுப்பின்
பண்டிகை பெருவிழா
அக்டோபர்
23,24,25
(வெள்ளி, சனி, ஞாயிறு)
தினமும் மாலை 6 மணிக்கு
இடம்
C.S.I கிறிஸ்து ஆலயம்,
வடக்கு தெரு இராமநாதபுரம்
Evg. VINCENTRAJ
Evg. KALAVINCENT

RNI NO .TNTAM/2000/00621
PERIODICALS ACT, 2023




To

If Undelivered (Please Return To)
**YESUVAI THINAM PARKIREN**
54,A.I.B.E.A Nagar,Paravai
Madurai-625402
South India.